LIBRARY
6 - OCT 1958
LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, the 14th February 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Accumulation of handloom cloth for want of market

*1 *S.N. Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any stocks of handloom cloth are accumulated with the co-operative societies and private producers for want of market; and

(*b*) if so, what steps the Government propose to take for finding suitable market and for ensuring full employment for the handloom weavers?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government are aware that there is accumulation of stocks of handloom cloth with co-operatives. Particulars of the stocks with private producers are not available.

The All-India Handloom Board appointed some months back a special Sub-Committee to report on measures required for relieving the slump. The report of the Committee is now under the consideration of the Government of India.

Another Sub-Committee of the Standing Committee of the All-India Handloom Board is now examining the question of strengthening the competitive capacity of the Handloom Industry in the country. The Committee has not submitted its report yet.

SRI N. K. PALANISAMI : கைத்தறி துணி தேக்கத்திற்குக் காரணம் ரிபேட்டை குறைத்ததாக இருப்பதால் இந்த ஒரு அணுவாவது நிரந்தர ரிபேட்டாக இருக்குமா என்பதற்கு உத்தரவாதம் சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நாம் இது விஷயமாக எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சிகளும் இந்த ஒரு அணுவாவது நிச்சயமாக இருக்கவேண்டும் என்பதற்காகதான்.

SRI K. VINAYAKAM : Sir, the reason for the accumulated stock lying with the different stores is believed to be that there is no demand for it in foreign countries like Ceylon, Burma, and Malaya. Have the Government taken any steps to create a demand in those places? Previously there was demand for our goods in those markets.

THE HON. SRI R. VENKATARAMAN : That is also one of the reasons. The export of handloom cloth has fallen during the current year.

[14th February 1958

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இப்பொழுது மில் துணிகளுக்கு ஒரு முனை விற்பனை வரிவந்து பல முனை விற்பனை வரி நீங்கியதன் காரணமாக மில் துணிகளின் விலை குறைந்து இருக்கிறது. அதன் காரணமாக கைத்தறித் துணிகள் தேங்கிக்கிடக்கின்றன. அதனால் கைத்தறித் துணியை வாங்குவதற்கும் இப்பொழுது இருக்கக்கூடிய தேக்கத்தைக் குறைப்பதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்லும் காரணமாகவும் இருக்கலாம். ஆனால் சென்ற டிசம்பர் மாதம் 13-ம் தேதிதான் இந்த புதிய வரி விகிதம் அமுலுக்கு வந்தது. அதற்கு முன்னாலேயே கைத்தறி துணிக்கு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அந்த தேக்கத்தைப் போக்குவதற்குத்தான் அகில இந்திய கைத்தறி போர்ட் என்ன செய்யவேண்டும் என்று இப்பொழுது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : கைத்தறி நெசவு தொழிலாளர்களுக்கு முழு நேர வேலை கிடைப்பதற்கு புதிதாக ஆரம்பிக்கப்போகும் தொழிற் சாலைகளில் சேர்ப்பதற்கு முழு கவனம் செலுத்துமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர் கேட்கக் கூடிய கேள்வி எனக்குப் புரியவில்லை. எந்தத் தொழிற்சாலைகளில் சேர்க்க வேண்டும் என்று கேட்கிறார் என்பது புரியவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : சிறிய தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, பெரிய தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, புதிதாக ஆரம்பிக்கப்போகும் தொழிற்சாலைகளில் பெரிய அளவில் கைத்தறி நெசவாளர்களை சேர்த்துக்கொள்வதற்கு சர்க்கார் கவனம் செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்களுக்கு கைத்தறி தொழிலிலேயே வேலை கிடைத்துக் கொண்டு இருக்கிறது. வருங்காலத்தில் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்படுமோ என்ற பயத்தால்தான் நாம் அதை ஒழுங்குபடுத்துவதற்கு முழு கவனமும் நடவடிக்கையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். கைத்தறியில் ஈடுபட்டிருக்கிறவர்களை ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் அமைக்க வேண்டும் என்ற பிரச்னை இப்பொழுது எழவில்லை.

SRI A. VEDARATHNAM : வெளி நாடுகளில் நம்முடைய துணிக்கு கிராக்கி குறைந்து இருப்பதற்குக் காரணம் அதனுடைய தரக் குறைவு காரணமா ? அப்படியானால் அந்தத் தரத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நம்முடைய துணியின் தரம் குறையவில்லை. பல நாடுகளுக்கு நம்முடைய துணி அனுப்பப்படுகிறது. முக்கியமாக ஜப்பானிலிருந்து சில துணி வருவதால் அந்த நாடுகளில் நம்முடைய துணிக்கு தேவை குறைபடுகிறது.

Bonus to textile workers

* 2 *S.N. Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the dispute regarding bonus for the year 1956–57 between the workers and the managements of the Textile Mills in the Coimbatore district has been finally settled; and

(*b*) if so, on what basis?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) No, Sir. The Government discussed the issue with the parties in December 1957, and the parties expressed willingness to have direct